VII.—GOVERNMENT BILL.

(1) THE MADRAS APPROPRIATION (NO. 2) BILL, 1961.

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, I move that leave be granted for the introduction of the Madras Appropriation (No. 2) Bill, 1961.

DEPUTY SPEAKER : The question is—

'That leave be granted for the introduction of the Madras Appropriation (No. 2) Bill, 1961.'

The motion was put and carried.

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, I introduce the Bill.

DEPUTY SPEAKER : The Bill is introduced.

VIII.—GENERAL DISCUSSION ON DEMANDS FOR GRANTS FOR FURTHER EXPENDITURE FOR 1960–61.

DEPUTY SPEAKER : The general discussion on Demands for Grants for Further Expenditure for 1960–61 will be continued.

SRI A. GOVINDASAMY : சட்டமன்ற உதவித் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தைப்பற்றி பேசுகின்ற நேரத்தில் கனம் அமைச்சர் சுப்பிரமணியம் அவர்களை ஒரு விஷயத்திலே முதன் முதலாக நான் பாராட்ட விரும்புகிறேன். அதாவது மாட்சிமை தங்கிய இரண்டாம் எலிசபெத் ராணி அவர்கள் நம்முடைய சென்னை ராஜ்யத்திற்கு விஜயம் செய்த நேரத்தில், நமது சர்க்கார் நிறைய ஏற்பாடு செய்து, அதற்கு பெருமளவு செலவு செய்து, சிறந்த முறையிலே வரவேற்பு அளிக்கப்பட்டது. அந்த இனங் களுக்காக நாற்காலி போன்றவைகள் வாங்குவதற்காக 20,000 ரூபாய் இதிலே ஒதுக்கியிருக்கிறார்கள். வேறு பல செலவுகளும் செய்யப்பட்டிருக்கின்றன. அந்த நிகழ்ச்சியை மத்திய சினிமா போர்டார் படமெடுத்தார்கள். படம் எடுத்தவர்கள் அதை நேற்றைய தினம் காஸினோ தியேட்டரில் போட்டு காண்பித்திருக் கிறார்கள்.

THE HON. SRI C. SUBRAMANIAM : அதற்கும், இதற்கும் என்ன சம்பந்தம்?

SRI A. GOVINDASAMY : தொடர்புபடுத்திப் பேசுகிறேன். அந்த நேரத்தில் நமது அமைச்சர் சுப்பிரமணியம் அவர்களும், விவசாய அமைச்சர் பக்தவத்சலம் அவர்களும் அந்தப் படத்தைச் சென்று பார்த்ததாக கேள்விப்படுகிறேன். அவர்கள் படத்தை பார்த்துவிட்டு உண்மையிலேயே வருத்தம் தெரிவித்திருப்பதாக அறிகிறேன். இவ்வளவு செலவு செய்து, இவ்வளவு ஏற்பாடு செய்து எடுக்கப்பட்ட படத்தில் ஒன்றிரண்டு நிகழ்ச்சிகள்தான் சென்னை யைப் பொறுத்தவரையில் காட்டப்படுகிறது, சென்னையைப் பொறுத்தவரையில் இப்படி செய்துவிட்டார்களே என்று சொல்லி அந்தப் படத்தை திருப்பி அனுப்பிவிட்டதாகக் கேள்விப்பட்டேன்.